## 26: மாரிகவட்டி விஹாரா

மாபெரும் மன்னன் தான் வெற்றி பெற்ற இடங்களை ஒன்றமைத்து அதில் பல இடங்களை தனக்கு வெற்றி கிடைக்க வழி வகுத்தப் படை வீரர்களுக்கு அவர்களுடைய தகுதிகளுக்கு ஏற்ப பரிசாக வழங்கினார். தேரபுட்டபய்யா *(Theraputtabhaya)* தனக்குக் கொடுத்த இடத்தை ஏற்க மறுத்தார். ‘இது எதற்காக? இன்னும் யுத்தமே முடியவில்லையே’ என்று கூறி அதை பெற்றுக் கொள்ள மறுத்தார். ‘யுத்தமா, அனைத்துப் பகுதிகளையும் ஒன்றாக இணைத்து ஒரு முழு இராஜியமாக்கி விட்டேனே, இனி எங்கே யுத்தம் தொடர உள்ளது ?’ எனக் கேட்ட மன்னரிடம் ‘என் மன எதிரிகளான அசை, காமம், குரோதம் ஆகியவற்றுடன் போராட்டத்தில் இருக்கின்றேன்’ என்றார் தேரபுட்டபய்யா. எத்தனைக் கூறியும் இராஜியத்தை ஏற்க மறுத்தவர் மன்னனின் அனுமதியுடன் பப்பஜ்ஜா உபதேசம் பெற்று துறவியாகி ஐநூறு புத்த பிட்குக்களுடன் சென்று வாழத் துவங்கினார்.

பெரும் ஆரவாரத்துடன் நடைபெற்ற ஒரு வார கால விழாக் கொண்டாட்டம் முடிவடைந்ததும் அனைத்து பட்டத்து இளவரசர்களும் கொண்டாடும் விதத்தில் நன்கு அலங்கரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்ட டிஸ்ஸா *(Tissa-tank)* ஏரியின் அருகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழா அரங்கிற்கு அபய்யா சென்றார்.

மரிகவட்டி விகாரில் *(Maricavatti-vihára)* அமைந்திருந்த இடத்தில் மன்னன் கொடுக்க இருந்த பரிசுப் பொருட்கள் தயாராக வைக்கப்பட்டு இருந்தன. அந்த இடத்தில்தான் பின்னர் ஸ்துபா எழுப்பப்பட்டது. அந்த இடத்திற்கு மன்னருடன் வந்திருந்த மக்கள் புனிதச் சின்னம் பதித்த ஈட்டியை பூமி மீது வைத்திருந்தனர். அன்று முழுவதும் தமது அரண்மனைப் பெண்களுடன் ஜலக்கிரீடை செய்து கொண்டு இருந்த மன்னன் மாலை வெளியே வந்து நகருக்குத் திரும்பத் துவங்கினார்.

‘ஈட்டியை எடுத்துக் கொண்டு பின்னால் வாருங்கள்’ என மன்னன் ஆணையிட புதைத்து வைக்கபட்டிருந்த அந்த ஈட்டியை வெளியில் எடுக்க முடியவில்லை.

தன்னுடன் வந்திருந்த மக்களினால் ஈட்டியை வெளியில் எடுக்க முடியவில்லை என்றதும் தமது படையினரைக் கூப்பிட்டு அதை எடுக்கக் கூறினார். அவர்களாலும் அதை எடுக்க முடியாமல் போக, அந்த ஈட்டிக்கு நறுமணங்கள் தூவி, பூக்கள் தூவி வணங்கினர். அந்த அதிசயக் காட்சியைக் கண்ட மன்னன் ஆச்சரியம் அடைந்து ஊருக்குத் திரும்பியதும் அந்த ஈட்டியை சுற்றி சுவர் எழுப்பி, ஸ்துபாபாவையும் அங்கே எழுப்ப முடிவு செய்த பின் அந்த இடத்தில் ஒரு விகாராவை அமைக்க ஏற்பாடுகளை செய்தார்.

மூன்று ஆண்டுகளில் அங்கு விகாரா அமைக்கப்பட புத்த சகோதரர்கள் அனைவரையும் அங்கு வரவழித்து விழா கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஒரு லட்சம் பிட்குக்களும், தொண்ணூராயிரம் பிட்குணிக்களும் அந்த மடாலயத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்டனர். அங்கு கூடி இருந்த புத்த சகோதரர்களிடையே பேசிய மன்னர் ‘நான் புத்த சகோதரர்கள் இருப்பதை ஒரு கணம் மறந்து குடுவையில் இருந்த சிறிது மிளகைத் தின்றேன். அந்த தவறுக்கு பிராய சித்தமாகவே இந்த மாரிகவட்டி விகாராவைக் கட்டி உள்ளேன். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்’ என வேண்டுகோள் விடுத்து ஆபய்யா ஏரியின் சில பகுதிகளையும் சேர்த்து உள்ளடக்கிய மடாலயத்தை அவர்களுக்கு சமர்பித்தார். அங்கு மிகப் பெரிய கூடம் அமைக்கப்பட்டு இருந்தது. அனைத்து பிட்குக்களுக்கும் தாராளமாக பரிசுகள் வழங்கப்பட்டன.

ஒரு வார காலத்திற்கு அவர்கள் அனைவருக்கும் உணவு உண்ண ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. ஒவ்ஒரு சாமனாக்களின் தகுதிகளுக்கும் ஏற்ப அவரவர்களுக்குப் பல பரிசுப் பொருட்களும் தரப்பட்டன. அத்தனை செலவும் மன்னரின்

நேரடிப் பார்வையில் நடந்தன. மன்னனின் இருதயம் எத்தனை விசாலமானதோ அத்தனை பெரிய அளவில் அனைத்துப் பரிசுக்களும் இருந்தன. மூன்று முக்கிய நிகழ்ச்சிகளான - ஸ்துபாவை கட்டியது, விகாராவை அமைத்தது மற்றும் பரிசுப் பொருட்களைத் தந்தது - என அனைத்திற்கும் சுமார் இருபது கோடி பணம் செலவு ஆயிற்று.

நீர், நெருப்பு, உயிரினங்கள், கைப்பற்றப்படல் மற்றும் கொள்ளை போன்றவற்றால் பாதிக்கப்படும் செல்வமானது, மக்களிடையே மதிப்புள்ளவர், நற்குணம் பெற்றவர், புனிதர்களிடையே நற்பெயர் பெற்றவர், தன் கடமைகளைத் தவறாமல் செய்பவர் என்ற அனைத்து நல்லறிவும் கொண்டவர்களின் கையில் கிடைப்பதே சாலச் சிறந்தது. செல்வம் அப்படிப்பட்ட குணாவசியத்தைக் கொண்டவர்களிடம் சென்றடைய வேண்டும் என்றே புத்திமான்கள் விரும்புவர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் இருபத்தி ஆறாம் பாகமான ‘மாரிகவட்டி விஹாரா’ என்ற பகுதி முடிவுற்றது.